**உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2010**

-----------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிலுவையிலுள்ள மொத்தக் கடன் மீதிகள் நிதிக் கூற்றுக்களில் நடைமுறையில்லா சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இ.க.நி.3 இன் பிரகாரம் ஒரு ஆண்டிற்கிடையில் தீர்க்கப்படவேண்டிய கடன் தவணைக் கட்டணங்கள் நடைமுறைச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களிற்களிற்கான குறிப்புக்களுடன் பட்டோலைகளை ஒப்பிட்ட பொழுது பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| **விடயம்** | **குறிப்புக்களின்படி தொகை** | **பட்டோலைகளின்படி தொகை** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| பிரதேச சபைகளின் கடன்பட்டோர் மீதி (குறிப்பு – 2) | 402,878,727 | 403,021,352 | 142,625 |
| கிடைத்த கட்டுநிதி (குறிப்பு 5) | 22,542,923 | 22,545,037 | 2,114 |

(ஆ) 2010 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதிகள் தொடர்பாக பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன

| | **2010 இற்கான பேரேட்டின்படி** | **2010 இன் நிதிக் கூற்றுக்களின்படி** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| **நடைமுறையல்லா கடன்பட்டோர்** | | | |
| மாநகர சபைகள் | 98,145,105 | 94,608,177 | 3,536,928 |
| நகர சபைகள் | 110,214,867 | 106,464,136 | 3,750,731 |
| பிரதேச சபைகள் | 379,441,859 | 371,404,415 | 8,037,444 |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டம் | 2,270,125,714 | 2,001,971,658 | 268,154,057 |

### 1.2.3 கிடைக்கவேண்டிய மற்றும் கொடுபடவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 22 பிரதேச சபைகள் மற்றும் 2 நகர சபைகளிலிருந்து 30 ஆண்டுகளிற்கு மேலாக முறையே ரூபா. 4,419,202 மற்றும் ரூபா. 189,725 தொகையான கடன்கள் கிடைக்க வேண்டியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் ரூபா. 1,888,755 தொகையான கடன்கள் வல்வெட்டித்துறை நகர சபைகளிடமிருந்து 27 ஆண்டுகளிற்கு மேலாக கிடைக்க வேண்டியதாக இருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டத்திடமிருந்து ரூபா. 1,950,574,475 மற்றும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்திடமிருந்து (எல்ஜீஐஐபீ) ரூபா. 810,973,268 தொகையான கிடைக்க வேண்டிய கடன் மீதிகளில் முறையே ரூபா. 1,152,266,127 அல்லது 59% மற்றும் ரூபா. 91,440,122 அல்லது 11% மட்டுமே 2011 மே 20 வரை சம்பந்தப்பட்ட தரப்பினரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.2.4 அலுவலக கட்டிட வாடகைக்கான நிதி ஏற்பாடு

இந்த நிறுவனம் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருவதுடன் கட்டிடத்திற்கான ரூபா. 101,110 தொகையான 50 % மான வாடகை சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் பொறுப்பேற்கப்பட்டது. அதற்கு மேலாக, மீளாய்வாண்டில் எதிர்கால வாடகையை செலுத்துவதற்காக ஒரு மாதத்திற்கு ரூபா. 50,000 படி ரூபா. 600,000 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா. 4,800,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் செலுத்தப்படவேண்டிய மாதாந்த வாடகைக்கு இன்னமும் உடன்பாடேற்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 பயன்பாடற்ற நிதிகள்

சூழலியல் சுற்றுலா, கிராமிய வீதிகளின் முன்னேற்றம், திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலையங்களின் நிருமாணம் என்றவாறான குறித்த செயற்திட்டங்களிற்காக உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு திறைசேரியால் மானியங்களாக ரூபா. 12 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் செயற்திட்டங்களிற்கு ரூபா. 4.134 மில்லியனை மாத்திரமே விடுவித்திருந்தது, அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதியத்தில் ரூபா. 7.866 மில்லியன் தொகை பயன்பாடின்றி இருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் நிதியத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா. 11,085,041 ஆன வரிக்குப் பின்னரான மிகையை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த ரூபா. 13,585,427 ஆன வரிக்குப் பின்னரான மிகையுடன் ஒப்பிடுகையில் அது மீளாய்வாண்டிற்கான மிகையில் ரூபா. 2,500,386 ஆன குறைவைக் காட்டுகின்றது. 2010 ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் ரூபா. 22,012,308 ஆன பற்றாக்குறையும் மேற்படி ரூபா. 11,085,041 ஆன மிகையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

**(அ) கடன்கள் வழங்குதல்**

இந்த நிதியத்தின் பிரதான பணிகளாவன, வருமானத்தை உருவாக்கும் செயற்திட்டங்கள் மற்றும் நகர உள்ளுராட்சி சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் உட்டகட்டமைப்பை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு சலுகை வட்டி வீதங்களின் கீழ் கடன்களை வழங்தலாகும்.

நிதியம், மீளாய்வாண்டில் பல்வேறு செயற்திட்டங்களிற்கு கடன்களை வழங்குவதற்காக ரூபா. 162 மில்லியன் தொகையை ஒதுக்கியிருந்ததுடன் ரூபா. 126.2 மில்லியன் தொகையான கடன்கள் 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தன.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10 செயற்திட்டங்களுக்காக ரூபா. 30 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 38.1 மிலலியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. ஆகையினால் ரூபா. 8 மில்லியன் மேலதிகமாக பண அளிப்புச் செய்யப்பட்டதுடன் 7 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மிகுதிச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் 5 செயற்திட்டங்களின்கீழ் அலுவலகக் கட்டிடம், நூலகம் மற்றும் ஞாபகார்த்த மண்டபம் என்பவற்றை நிருமாணிப்பதற்கான கடன்களை வழங்குவதற்காக ரூபா. 20 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா. 12.5 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டதுடன் ஒரு செயற்திட்டம் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(iii) வாராந்தர சந்தைகள் மற்றும் பொருளாதார நிலையங்களை நிருமாணிப்பதற்காக 6 செயற்திட்டங்களிற்கு ரூபா. 20 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு செயற்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா. 3 மில்லியனாகும். ரூபா. 42.8 மில்லியன் தொகை பண அளிப்புச் செய்யப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 3 செயற்திட்டங்கள்

மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும், கிரிபத்கொடை வாராந்தர சந்தையை நிருமாணிப்பதற்காக களணி பிரதேச சபைக்கு ரூபா. 35 மில்லியன் பண அளிப்பு செய்யப்பட்டிருந்தது.

(iv) கிராமிய வீதிகளின் அபிவிருத்தி, திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டம், நீர் செயற்திட்டத்தின் நிருமாணம் மற்றும் ஏனைய வருமானத்தை உருவாக்கும் செயற்திட்டங்கள் என்பவற்றுக்காக ரூபா. 35 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்தபோதிலும், 2010 திசெம்பர் 31 வரை எதுவித கடன்களும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலுவை கடன் தவணைக் கட்டணங்களின் அறவீடு**

---------------------------------------------------------------------------------------------

2010 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா. 28.8 மில்லியன் தொகையான உள்ளூராட்சிச் சபைகளிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் தவணைக் கட்டணங்களில், மீளாய்வாண்டில் ரூபா. 14.3 மில்லியன் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.
இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் நகர சபைகளிடமிருந்து 2010 சனவரி 01 இல் உள்ளவாறான கிடைக்க வேண்டிய கடன் தவணைக் கட்டணங்களின் அறவீடு மிகவும் குறைந்த மட்டத்திவேயே (அதாவது 20%) இருந்தது. மாநகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளிடமிருந்தான கடன் அறவீட்டு வீதம் முறையே 98% மற்றும் 53% ஆகும். அதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த கடன் அறவீட்டு வீதம் 45.6% ஆக இருந்தது.

(ii) பாணந்துறை நகர சபை மற்றும் வல்வெட்டித்துறை நகர சபை என்பவற்றிற்கு வழங்கப்பட்ட ரூபா. 7,850,000 மற்றும் ரூபா. 2,012,000 தொகையான கடன்களில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா. 4,850,000 மற்றும் ரூபா. 1,888,755 ஆன தொகைகள் நிலுவையாக உள்ளன.

(iii) ஹக்மன பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா. 3 மில்லியன் தொகையான கடனில் ஒரு தவணைக் கட்டணமாவது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) ஹிங்குரான வாராந்த சந்தை அபிவிருத்திக்காக 2003 ஆம் ஆண்டில் தமன பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா. 1,150,000 தொகையான கடனில் ரூபா. 40,537 ஆன ஒரு தவணைக் கட்டணம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் தவணைக் கட்டணமெதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) 1983 ஆம் ஆண்டில் கரைச்சி பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா. 855,000 தொகையான கடனில் ரூபா. 11,285 ஆன ஒரு தவணைக் கட்டணம் மற்றும் ரூபா. 486,677 தொகையான வட்டி என்பன 1999 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்தன அதன் பின்னரான தவணைக் கட்டணமெதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) 1982 ஆம் ஆண்டில் வலிகாமம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா. 940,000 தொகையான கடனில் ரூபா. 376,000 தொகையான தவணைக் கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன.

(vii) 1986 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் மெதாகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா. 1,791,500 தொகையான கடனில் ரூபா. 220,102 தொகையான தவணைக் கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன.

**(viii)** நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டம் மற்றும் இடையறாத பயிர் அபிவிருத்தி செயற்திட்டம் என்பவற்றால் உள்ளூராட்சிச் சபைகளிற்கு வழங்கப்பட்ட முறையே ரூபா. 570,077,446 மற்றும் ரூபா. 72,922,475 தொகையான கடன்கள் தொடர்பாக ஒரு தவணைக் கட்டணம் கூட அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலுவையான கடன் வட்டிகளின் அறவீடு**

---

2010 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட நிலுவயைான கடன் வட்டி ரூபா. 4.8 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவறாான கிடைக்க வேண்டிய கடன் வட்டி ரூபா. 18.5 மில்லியனாகும். நிலுவையான வட்டியின் காலப்பகுப்பாய்வு விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| காலப்பகுதி | நிலுவையான கடன் வட்டித் தொகை |
|---|---|
| | ரூபா. |
| 5 ஆண்டுகளிற்கு மேல் | 10,477,963 |
| 1 ஆண்டிற்கு மேல், 5 ஆண்டுகளிற்குக் குறைய | 3,206,253 |
| 1 ஆண்டிற்குக் குறைய | 4,790,559 |
| | 18,474,775 |
| மொத்தம் | ========== |

மேலே காட்டப்பட்ட அறவிடப்படவேண்டிய கடன் வட்டி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாணந்துறை, அம்பாறை மற்றும் அம்பலாங்கொடை நகர சபைகளிற்கு வழங்கப்பட்ட கடன் தொகைகள் முறையே ரூபா. 7,850,000 ரூபா. 4,800,000 மற்றும் ரூபா. 3,360,000 ஆக இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து அவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய கடன் வட்டி முறையே ரூபா. 6,356,000 ரூபா. 1,172,911 மற்றும் ரூபா. 2,242,320 ஆக இருந்தன.

(ii) பிரதேச சபைகளிற்கு வழங்கப்பட்ட கடன்களிற்கான நிலுவயையான கடன் வட்டி விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| பிரதேச சபை | வழங்கப்பட்ட கடன் தொகை | 2010.12.31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி | நிலுவையான காலப்பகுதி |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | |
| ஹக்மன | 3,000,000 | 1,131,519 | 2005-2010 |
| பெருவளை | 9,900,000 | 193,696 | 2010 |
| பேலியத்த | 8,000,000 | 367,009 | 2010 |
| தமன | 1,150,000 | 285,015 | 2006-2010 |
| எம்பிலிப்பிட்டி | 5,122,900 | 485,762 | 2008-2010 |
| மெதாகம | 1,791,500 | 2,399,427 | 5 ஆண்டுகளிற்கு மேல் |
| | | 4,862,428 | |
| | | ========== | |

**(ஈ) வட்டி தவிர்ந்த கடன் தவணைக் கட்டணங்கள் மாத்திரமேயான அறவீடு**

8 உள்ளூராட்சி சபைகளிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா. 21,576,981 தொகையான முழுக் கடனும் அறவிடப்பட்டிருந்த போதிலும், அதில் கிடைக்க வேண்டிய ரூபா. 81,325 ஆன வட்டி 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் 2006 சனவரி 19 இல் கைச்சாத்திடப்பட்ட 2201 எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின்படி, உள்ளூராட்சி சபை உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆக்கக்கூறு "பீ" இன் அமுலாக்கல் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டது. இதன்கீழ் ஐ.அ.டொலர் 42.6 மில்லியன் (ரூபா. 4,260 மில்லியன்) உள்ளூராட்சி சபைகளின் உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்காக உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு ஒதுக்கப்படடிருந்தது. மீளாய்வாண்டில், செயற்திட்டத்திற்காக ரூபா. 1,581 மில்லியனை விடுவிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா. 972 மில்லியன் மட்டுமே விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இந்த செயற்திட்டத்தின்கீழ் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா. 847,000 செலுத்தப்பட்டிருந்தபோதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டம் கணக்காய்வுப் பரிசோதனை திகதியான 2011 மே 20 அளவில்கூட முறையாக தொழிற்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 நகர அபிவிருத்தி, குறைந்த வருமான வீடமைப்புச் செயற்திட்டம்

---

#### (அ) கம்பளை நகரசபை – சந்தைத் தொகுதி செயற்திட்டம்

---

உடன்படிக்கையின்படி, கம்பளை நகர சபைக்கான சந்தைத் தொகுதியின் நிருமாணம், 2003 செப்தெம்பர் 5 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்படவேண்டும். எனினும் அது 2006 யூன் 18 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. நிருமாணிக்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை ஆவணத்திற்கு ஆவணம் வித்தியாசப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா. 70 மில்லியனாகும், எனினும் உண்மையான பண அளிப்பு ரூபா. 96.3 மில்லியனாகும். ரூபா. 26.3 மில்லியன் தொகைக்கான மேலதிகப் பண அளிப்பின் நிதியளிப்பு நடைமுறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. காலம் கடந்த 5 ஆண்டுகளில் ஒரு தவணைக்கட்டணம் தானும் செலுத்தப்படடிருக்கவில்லை. கடன் தவணைக் கட்டணங்கள் மற்றும் வட்டி என்பவற்றின் நிலுவைகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா. 69,178,585 ஆகும்.

#### (ஆ) தம்புள்ளை பிரதேச சபை – சந்தை தொகுதி மற்றும் பஸ் நிலையம்

---

தம்புள்ளைப் பிரதேச சபைக்கான சந்தைத் தொகுதி மற்றும் பஸ் நிலையத்தின் நிருமாணத்திற்காக ரூபா. 106,956,260 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 40 தவணைக் கட்டணங்கள் கொண்ட கடனாக இந்தச் செலவினத்தை அறவிடும்படி செயற்திட்டப்பணிப்பாளர் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தார். எனினும் கடன் உடன்படிக்கை மற்றும் இந்தச் செலவினம் தொடர்பான சிட்டைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தம்புள்ளை பிரதேச சபையின் தலைவர், ஒப்பந்தக்காரர் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது கையளித்திருந்தமையால் ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவிலிருந்து விலகியிருக்கும்படி செயற்திட்டப் பணிப்பாளருக்கு அறிவித்திருந்தார். செயற்திட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட மாதாந்த வருமானம் ரூபா. 326,650 ஆக இருந்த போதிலும், கடன் தவணைக் கட்டணங்கள் உள்ளடங்கலாக செலவினம் ரூபா. 1,108,752 ஆக இருந்தது. விசாரணை அறிக்கையின்படி தவணைக் கட்டணங்களின் மொத்த நிலுவைகள் மற்றும் வட்டி நிலுவை என்பன முறையே ரூபா. 18,191,169 மற்றும் ரூபா. 45,281,083 ஆக இருந்தன.

**(இ) திஸ்ஸமாறாம, பிரதேச சபை சந்தைத் தொகதி செயற்திட்டம்**

---

திஸ்ஸமாறாம பிரதேச சபைக்கான சந்தைத் தொகுதியின் நிருமாணத்திற்காக ரூபா. 38,251,754 ஆன தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து 40 தவணைக்கட்டங்களாக கடனை அறவிடுமாறு செயற்திட்டப்பணிப்பாளர் உள்ளுர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு அறிவித்திருந்தார். கடன் உடபடிக்கை மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான சிட்டைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தத் தொகுதியை பூர்த்தி செய்வதிலுள்ள நலிவுகள் காரணமாக வருமானத்தை உருவாக்கம் நோக்கத்திற்காக அதனைப் பயன்படுத்த முடியவில்லை. தவணைக்கட்டணங்களின் மொத்த நிலுவைகள் மற்றும் வட்டி நிலுவைகள் என்பன முறையே ரூபா. 9,374,703 மற்றும் ரூபா. 18,908,929 ஆக இருந்தன.

**(ஈ) பொதுவான கருத்துரைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- உடன்படிக்கைப் பிரதிகள் சம்பந்தப்பட்ட செயற்திட்ட கோவைகளில் இணைக்கப்பட்டிருக்கவில்லை.
- செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தபோதிலும் அவை பயன்படுத்தும் நிலையில் இருக்கவில்லை
- கட்டிட செயற்திட்டங்களின் உரித்துடைமை பிரதேச சபைகளிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் தவணைக்கட்டணங்களைச் செலுத்தமாறு கட்டளையிடப்பட்ட போதிலும் கட்டிடங்கள் பயன்படுத்தும் நிலையில் இருக்கவில்லை.
- கடன் தவணைக்கட்டணங்கள் செயற்திட்ட வருமானத்திலும் பார்க்க் உயர்வானதாக இருந்தமையால் சில சபைகள் நிதிப் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்திருந்தன.
- கடன்களை வழங்கும் பொழுது போதிய பிணை பெறப்பட்டிருக்கவில்லை. உ+ம்: கம்பளை சந்தை தொகுதி செயற்திட்டம், தம்புள்ளை சந்தை தொகுதி மற்றும் பஸ் நிலைய செயற்திட்டம் மற்றும் திஸ்ஸமாறாம சந்தைத் தொகுதி செயற்திட்டம் என்பன,

**2.2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

------------------------------------

பாதீடிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமை பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-------------------------------------------------------------------

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) நிலுவையான கடன்கள் மற்றும் வட்டியின் அறவீடு

(ii) பாதீட்டுக் கட்டுப்பாடு